ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2408/15 - 2024 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2024.11.01
2408/15 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அநுர குமார திஸாநாயக்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம் 2023, நவெம்பர் 01 ஆந் திகதிய 2356/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தற்போதைய கட்டளையின் ஒரு வருடத்தின் செல்லுபடியாகும் காலம் 2024, நவெம்பர் 01 ஆந் திகதியன்று காலாவதியாகிறது என்ற அடிப்படையில் 2024, நவெம்பர் 02 ஆந் திகதி முதல் 2024, திசெம்பர் 31 ஆந் திகதி வரை இங்கே அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டத்தைப் பொருத்தமட்டில், அந்த அட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றினை விதிக்கிறேன்.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| பண்டத்தின் விபரம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விபரம் | |
| 1 | 17.01 | | கரும்பு அல்லது பீட் சீனி மற்றும் இரசாயன தூய சுக்ரோஸ், திண்ம வடிவத்தில் | |
| | | | ஏனைய : | |
| | | 1701.91 | கூடுதல் சுவையூட்டல் அல்லது வண்ணமயமான பொருள் கொண்டது | |
| | | 1701.91.10 | $99.7^0$ க்கு அதிகமாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ போலரி மீட்டர் வாசிப்பு இருப்பது | கி. கி. ஒன்று 50 ரூபா |
| | | 1701.91.20 | $99.5^0$ க்கு அதிகமாகவோ அல்லது சமமாகவோ மற்றும் $99.7^0$ க்கு குறைவாகவோ போலரி மீட்டர் வாசிப்பு இருப்பது | கி. கி. ஒன்று 50 ரூபா |
| | | 1701.99 | ஏனைய : | |
| | | 1701.99.10 | கரும்பு சீனி $99.7^0$ க்கு அதிகமாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ இருக்கும் துருவமுனை அளவீடு | கி. கி. ஒன்று 50 ரூபா |
| | | 1701.99.20 | கரும்பு சீனி $99.5^0$ க்கு அதிகமாகவோ அல்லது சமமாகவோ மற்றும் $99.7^0$ க்கு குறைவாகவோ போலரி மீட்டர் அளவீடுகளைக் கொண்டுள்ளது | கி. கி. ஒன்று 50 ரூபா |
| | | 1701.99.30 | பீட் சீனி $99.7^0$ க்கு அதிகமாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ போலரி மீட்டர் அளவீடுகளைக் கொண்டுள்ளது | கி. கி. ஒன்று 50 ரூபா |
| | | 1701.99.40 | பீட் சீனி $99.5^0$ க்கும் அதிகமாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ மற்றும் 99.70 க்கும் குறைவாகவோ போலரி மீட்டர் வாசிப்பு | கி. கி. ஒன்று 50 ரூபா |
| | | 1701.99.90 | ஏனைய : | கி. கி. ஒன்று 50 ரூபா |

இந்தக் கட்டளையானது, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு செல்லுபடியாதல் வேண்டும்.

**அநுர குமார திஸாநாயக்க,**
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல்,
திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்.

நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல்,
திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு,
கொழும்பு 01,
2024, நவெம்பர் 01.

EOG 11-0015